பிரதம செயலாளர் செயலகம், வடக்கு மாகாண சபை

ප්‍රධාන ලේකම් කාර්යාලය, උතුරු පළාත් සභාව

**Chief Secretary's Secretariat, Northern Provincial Council**

பிரதிப்பிரதம செயலாளர் அலுவலகம் - நிர்வாகம்

නියෝජ්‍ය ප්‍රධාන ලේකම් කාර්යාලය - පරිපාලන

**Office of the Deputy Chief Secretary - Administration**

மாகாண சபை வளாகம் A9 வீதி, கைதடி | පළාත් සභාව සංකීර්ණය, A9 පාර, කෛතඩි | Council Complex A9 Road, Kaithady


எனது இல / මගේ අංකය / My No: NP/02/14/GN/38/2027

Date: 2026.06.30

பிரதிப் பிரதம செயலாளர் நிர்வாகம் சுற்றறிக்கை:- NP/04/2026

பிரதம செயலாளர்,
ஆளுநரின் செயலாளர்,
செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
செயலாளர், பேரவை செயலகம்,
அமைச்சின் செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வடக்கு மாகாணம்.

**இணைந்த சேவை உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றம் - 2027**

1. மேற்படி விடயம் தொடர்பாக 1817/30 ஆம் இலக்க 2013.07.03 ஆம் திகதிய வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவையின் அத்தியாயம் XVIII இன் ஏற்பாடுகளைத் தழுவி கௌரவ ஆளுநர் அவர்களால் 2021.07.13 ஆம் திகதியில் அனுமதிக்கப்பட்ட வடக்கு மாகாண இணைந்த சேவை உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றக் கொள்கை மற்றும் அதன் திருத்தங்களுக்கு அமைய பின்வரும் இணைந்த சேவை உத்தியோகத்தர்களுக்கு 2027 ஆம் ஆண்டிற்கான வருடாந்த இடமாற்ற விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழே குறிப்பிடப்பட்டுள்ள வடக்கு மாகாண இணைந்த சேவையிலுள்ள பதவிகள் தொடர்பிலான வருடாந்த இடமாற்றங்கள் 2027.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

   I. மொழி பெயர்ப்பாளர் சேவை
   II. அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை
   III. முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை (III/II/I)
   IV. தொழில்நுட்பவியல் சேவை
   தொழிநுட்ப உத்தியோகத்தர் (குடிசார் , மின்னியலாளர்) , படவரைஞர்
   V. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை உதவியாளர்
   VI. சாரதிகள் சேவை
   VII. அலுவலகப் பணியாளர் சேவை

*மாகாண சாரதிகள் சேவைக்கான 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த இடமாற்றக்கட்டளையினை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் நீதிமன்றத்தினால் இடைக்காலத்தடை வழங்கப்பட்ட பட்டியலில் உள்ள சாரதிகள் தவிர்ந்த, வடக்கு மாகாண இணைந்தசேவை உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றக் கொள்கைக்கு அமைய இடமாற்றத்திற்குத் தகுதி பெற்றுள்ள ஏனைய அனைத்து சாரதிகளும் 2027 ஆம் ஆண்டிற்கான வருடாந்த இடமாற்றத்திற்கு விண்ணப்பித்தல் வேண்டும்.


பிரதம செயலாளர் / ප්‍රධාන ලේකම් / Chief Secretary — Tel : 021 222 0843 (Dir) : 021 222 0840 (Gen) Fax : 021 222 0841 E-mail : chiefsecnpc@gmail.com

பிரதிப் பிரதம செயலாளர் / නියෝජ්‍ය ප්‍රධාන ලේකම් / Deputy Chief Secretary — Tel : 021 223 2351 (Dir) : 021 222 0960 (Gen) Fax : 021 222 0950 E-mail :ppas.np@gmail.com

3. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கீழ்க்குறிப்பிடப்படும் மாதிரி விண்ணப்பத்திற்கு இணங்க தயாரிக்கப்படும் வருடாந்த இடமாற்றத்திற்கான விண்ணப்பமானது திணைக்களத் தலைவரின் பரிந்துரையுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

இடமாற்றத்தினை எதிர்பார்க்கும் / தகைமை பெற்றுள்ள அலுவலர்களால் நிரப்பப்படும் விண்ணப்பப்படிவம் (Form/CS/ATR/01) – பின்னிணைப்பு I)

வருடாந்த இடமாற்றங்களைக் கோரும் அலுவலர்களின் சேவைக்கால ஒழுங்கில் . விண்ணப்பங்களின் பட்டியல் (Form/CS/ATR/02) – பின்னிணைப்பு II)

தற்போதய சேவை நிலையத்தில் 05 வருட சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருந்தும் இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்காத அலுவலர்களின் சேவைக்கால ஒழுங்கிலான பட்டியல் - (Form/CS/ATR/03) – பின்னிணைப்பு III)

- **குறிப்பு: தற்போதைய சேவை நிலையத்தில் 05 வருட சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருந்தும் இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்க விருப்பம் தெரிவிக்காத உத்தியோகத்தர்கள் தனியாக விண்ணப்பம் சமர்ப்பிக்கத் தேவையில்லை என்பதுடன் திணைக்களத் தலைவரினால் Form/CS/ATR/03 இல் விபரங்களை பூர்த்தி செய்து அனுப்பி வைத்தல் போதுமானது.**

4. வருடாந்த இடமாற்றக்கட்டளையைப் பெற்ற எல்லா அலுவலர்களும் உரிய திகதியில் புதிய சேவை நிலையத்தில் கடமைக்காக அறிக்கையிடும் பொறுப்பைக் கொண்டுள்ளனர். எனவே இடமாற்றத்திற்குத் தகைமை பெற்றுள்ள அலுவலகர்களின் கடமைகளைப் பகிர்ந்தளிப்பதற்கும் அதற்கான பயிற்சிகளை வழங்குவதுடன் உரிய திகதியில் புதிய சேவை நிலையங்களில் கடமையைப் பொறுப்பேற்க அவர்களை விடுவிக்கவும் திணைக்களத் தலைவர்கள் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

5. இவ் இணைந்த சேவையிலுள்ள அலுவலகர்களின் இடமாற்றங்கள் தொடர்பாக தங்களது அமைச்சின் அல்லது திணைக்களத்தின் மற்றும் அவற்றின் கீழ்வரும் அலுவலகங்களிலும் கடமையாற்றும் சகல அலுவலர்களுக்கும் அறியத்தருவதுடன், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அட்டவணைப்படுத்தி விண்ணப்பங்களுடன் பிரதிப் பிரதம செயலாளர் - நிர்வாகம் அலுவலகத்திற்கு **2026.07.30** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

- குறிப்பு 1:- தங்களால் முன்னளிக்கப்படும் இணைந்த சேவையிலுள்ள அலுவலகர்களின் இடமாற்ற விண்ணப்பங்களுக்குரிய அட்டவணைகள் (பின்னிணைப்பு II, III) **கடமையாற்றிய கூடிய சேவைக்கால முதுமுறை ஒழுங்கில் பட்டியலிடப்பட்டு** சமர்ப்பிக்கப்படுவதுடன், அதன் மென்பிரதி எமது மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பி வைக்கப்படுதல் (ppas.np@gmail.com) வேண்டும்.

- குறிப்பு 2:- தற்போதைய சேவை நிலையத்தில் 05 வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்திருந்தும் இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்காத அலுவலகர்களது விபரங்கள் மற்றும் மனங்கவரும் சேவை நிலையத்தில் 03 வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்திருந்தும் இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்காத அலுவலர்களது விபரங்கள் பின்னிணைப்பு III இல் திணைக்களத்தலைவர்களால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். இவ்வாறான அலுவலர்களுக்கு வழங்கப்படும் இடமாற்றக்கட்டளைகள் தொடர்பான மீளாய்வுக் கோரிக்கைகள் மீளாய்வுசபைக்கு சமர்ப்பிக்கப்படமாட்டாது. அத்துடன் இப்பின்னிணைப்பு தயாரிக்கப்படும் போது பொது நிர்வாக சுற்றறிக்கை 14/2022 மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய விடுமுறை பெற்றுக் கொண்டவர்கள் குறித்த சேவை நிலையத்தில் 05 வருடங்களை பூர்த்தி செய்திருப்பின் அத்தகவல்களும் குறிப்பில் பகுதியாகக் காட்டப்படல் வேண்டும்.

பிரதம செயலாளர் / ප්‍රධාන ලේකම් / Chief Secretary
Tel : 021 222 0843 (Dir)
: 021 222 0840 (Gen)
Fax : 021 222 0841
E-mail : chiefsecnpc@gmail.com

பிரதிப் பிரதம செயலாளர் / නියෝජ්‍ය ප්‍රධාන ලේකම් / Deputy Chief Secretary
Tel : 021 223 2351 (Dir)
: 021 222 0960 (Gen)
Fax : 021 222 0950
E-mail :ppas.np@gmail.com

- குறிப்பு 3:- நெடுந்தீவு பிரதேசத்திலுள்ள சேவை நிலையம் ஒன்றிற்கு இடமாற்றம் பெற்று ஒரு வருட சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்த , நெடுந்தீவு பிரதேசத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டிராத அலுவலர்கள் வருடாந்த இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்க முடியும் (புதிய நியமனம் பெற்றவர்களுக்குப் பொருத்தமற்றது)

- குறிப்பு 4:- இடமாற்றத்திற்கு விண்ணப்பித்த உத்தியோகத்தர்கள் அல்லது இடமாற்றத்திற்குத் தகுதி பெற்றிருந்தும் விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பில் திணைக்களத்தலைவர் சிபார்சுகளை முன்வைக்கும்போது விசேடதேவையுடைய/மாற்றுவலுவுள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பாகத் தங்களது சிபார்சுகளைத் தெளிவாக முன்வைக்க கோரப்படுகின்றீர்கள்.

- குறிப்பு 5:- மிகை ஆளணி காணப்படும் அலுவலகங்களில் இடமாற்றம் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் பதிலீடு வழங்கப்படமாட்டாது.

- குறிப்பு 6:- இணைந்த சேவை உத்தியோகத்தர்கள் தமது சேவைக்காலத்தில் ஆகக்குறைந்தது 12 வருடங்கள் முறையே முதல் நியமனத்தில் 05 வருடங்களும் இதன் பின்னராக ஆகக் குறைந்தது 03 வருடங்களும் எனும் அடிப்படையில் வருடாந்த இடமாற்ற சுழற்சிக்கமைவாக தமது நிரந்தர மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டத்தில் சேவையாற்ற வேண்டிய தேவை அவசியமாகின்றது என்பதனை உத்தியோகத்தர்கள் கருத்திற் கொள்ள வேண்டும்.

- குறிப்பு 7 :- வருடாந்த இடமாற்றத்திற்கு தகுதி பெற்று விண்ணப்பிக்கும் அனைத்து இணைந்த சேவை உத்தியோகத்தர்களும் தங்களது சேவை நிலைய விருப்பத்தெரிவில் தங்களது நிரந்தர வதிவிட மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டத்தின் சேவை நிலையமொன்றைத் தெரிவாக உள்ளடக்குவது பொருத்தமானதாகும் **(வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்ய வேண்டிய தேவை எழுமாயின் தெரிவுகள் கருத்திற் கொள்ளப்படும்).**

மேலும், 2027ஆம் ஆண்டிற்குரிய இணைந்த சேவை உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றத்தினை சிறப்பாக நடைமுறைப்படுத்துவதற்கான தங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பும் எதிர்பார்க்கப்படுகின்றது.

*எ.அன்ரன் யோகநாயகம்*
பிரதிப் பிரதம செயலாளர் - நிர்வாகம்
வடக்கு மாகாணம்.

எ.அன்ரன் யோகநாயகம்
பிரதிப் பிரதம செயலாளர்
பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம்- நிர்வாகம்
வடக்கு மாகாணம்

பிரதம செயலாளர்
ප්‍රධාන ලේකම්
Chief Secretary
Tel : 021 222 0843 (Dir)
: 021 222 0840 (Gen)
Fax : 021 222 0841
E-mail : chiefsecnpc@gmail.com

பிரதிப் பிரதம செயலாளர்
නියෝජ්‍ය ප්‍රධාන ලේකම්
Deputy Chief Secretary
Tel : 021 223 2351 (Dir)
: 021 222 0960 (Gen)
Fax : 021 222 0950
E-mail :ppas.np@gmail.com